DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous C.**C.No.** 75/2022
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா. 1
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | தெய்வானை |
| Father/ Husband Name | : | கார்மேகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **28.09.2022**

**<u>முதல்விசாரணை</u>**

1)சத்தியமாக சொல்கிறேன். நான் வெள்ளிக்கட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வயோகத்தின் காரணமாக வேலை எதுவும் செய்யவில்லை. எதிரியைத் தெரியும். அவர் என் பக்கத்து வீட்டில் வசிக்கிறார். எதிரி இடத்துப் பிரச்சனை தொடர்பாக கடந்த 14.9.2021 அன்று மாலை 3.00 மணிக்கு நானும், சாட்சி முத்தையாவும் வீட்டிலிருந்த போது கதிர்வேல் வந்து மரத்தையும், வேலியையும் வெட்டி பிரித்துக் கொண்டிருந்தார். அப்போது நானும் என்மகன் முத்தையாவும் ஏன் வெட்டுகிறீர்கள் என கேட்டோம்.

2) அதற்கு எதிரி என்னை தேவடியா முண்டை என்று ரொம்ப பேசினார். போலீசிற்கு போனால் உன்னை வெட்டி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் வீட்டிற்குள் சென்று விட்டோம். என்னை வெட்டி கொலை செய்வதாக சொல்லி என் வீட்டை சுற்றி வந்தார். அதன் பின் என் கணவருக்கு போன் செய்து என் கணவர் வந்த பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். (**புகார் அ.சா.ஆ.1**). புகார் மனுவில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். அங்கே இருந்தவர் ஒருவர் மூலம் புகார் எழுதினோம்.

அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1)எதிரி வீடும் என் வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எதிரி எனது பங்காளி என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே முள் வேலி உள்ளதா என்றால் பனந்தட்டி வேலி உள்ளது. எதிரி அவர் இடத்தில் இருந்த புளியமரத்தை வெட்டினார் என்றால் சரியல்ல. என் இடத்தில் இருந்தது. சண்டை நடந்ததாக சொல்லப்படும் போது நான் என் இடத்திலும் எதிரி அவர் இடத்திலும் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். நான் எனது கணவர் கார்மேகத்திற்கு போன் செய்த போது அவர் வட்டிக் கடையில் சம்பளத்திற்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

2) நாங்களும், எதிரி குடும்பமும் இடப் பிரச்சனை காரணமாக ரொம்ப நாட்களாக பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். சர்வேயரை வைத்து எவ்வளவு நாட்களுக்கு முன்பு இடத்தை அளந்தேன் என்ற சொன்னால் சம்பவ நாளுக்கு ஒரு வாரம் முன்பு அளந்தோம். சர்வேயர் அளந்ததில் வேப்ப மரம், புளியரம் எதிரி இடத்தில் சென்றது என்றால் சரியல்ல. மேற்படி மரத்தின் கிளைகள் தான் எதிரி இடத்தில் படர்ந்திருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எதிரி அவர் இடத்தில் இருந்த மரத்தின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

3) புகாரை எழுதிக் கொடுத்த நபரின் பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான். அன்றே வந்து போட்டோவும் எடுத்துக் கொண்டார்கள். நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்க வில்லை என்றும், எனக்கும் எதிரிக்கும் உள்ள முன் விரோதத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை அசிங்கமாக பேசிவில்லை என்றும், கொலை மிரட்டல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **C.C.No. 75/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா. 2
Defence
Court

Name : முத்தையா
Father/ Husband Name : கார்மேகம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **28.09.2022**

**<u>முதல்விசாரணை</u>**

1) சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் வெள்ளிக்கட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் புரோட்டா மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 தெய்வானை என் அம்மா. எதிரி என் வீட்டு பக்கத்தில் தான் வசிக்கிறார். கடந்த 14.09.2021 அன்று மதியம் சுமார் 3.00 மணிக்கு நானும், அ.சா.1ம் வீட்டிலிருந்த போது எதிரி அருவாளை எடுத்து வந்து எங்கள் வீட்டின் வாசல் முன்பாக உள்ள மரத்தை என் மரம் என்று சொல்லி வெட்டினார். நானும், அ.சா.1ம் ஏன் மரத்தை வெட்டுகிறாய் என்று கேட்டதற்கு எதிரி அ.சா.1ஐப் பார்த்து தேவடியா முண்டை, அவுசாரி என்று கெட்ட வார்த்தையால் பேசினார். எதிரி கொண்டு வந்திருந்த அருவாளை காட்டி எங்களை கொலை செய்து விடுவதாக கூறினார். நாங்கள் வீட்டிற்குள் சென்று விட்டோம்.

2) இரவு முழுவதும் எதிரி புகார் கொடுக்க சென்றால் எங்களை வெட்டி கொலை செய்து விடுவதாக சொல்லி வீட்டை சுற்ற வந்தார்.

அதன் பிறகு என் அப்பாவிற்கு போன் செய்து மறுநாள் திருவேகமப்த்தூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1)**நானும், எதிரியும் இடப்பிரச்சனை சம்பந்தமாக பேசிக் கொள்ள மாட்டோம் என்றால் சரிதான். எதிரி அருவாளை காட்டி மிரட்டிய விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். இரவு முழுவதும் எதிரி எங்கள் வீட்டை சுற்றி வந்ததை நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எதிரி எங்கள் வீட்டின் முன் உள்ள மரத்தை வெட்டிய விவரத்தையும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எங்கள் வீட்டை சுற்றி நிறைய வீடுகளும், அதில் ஆட்களும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2)காவல் நிலையத்திற்கு நான் எனது அப்பா கார்மேகம், எனது அம்மா உடன் நான் சென்றோம். புகாரை காவல் நிலையத்தில் போலீசார் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.1டன் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்ற அன்றே சம்பவ இடத்தைப் பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றும் சாட்சிகளை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும்,அ.சா.1 எனது அம்மா என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எங்களை அசிங்கமாக பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரண:** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து
குற்றவியல் நடுவர்,
தேவகோட்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **C.C.No. 75/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா. 3
Defence
Court

Name : கார்மேகம்
Father/ Husband Name : முத்தையா சேர்வை
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of
**28.09.2022**
**<u>முதல்விசாரணை</u>**

1) சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் வெள்ளிக்கட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி, அ.சா.2 என் மகன். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 14.09.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் அ.சா1, அ.சா.2ம் வீட்டிலிருந்த போது எதிரி அருவாளை எடுத்துக் கொண்டு வந்து வேலியில் உள்ள மரங்களை வெட்டி வேலியை பிரித்தார். அப்போது அ.சா.1, அ.சா.2 ஏன் வேலியை பிரிக்கிறாய் என கேட்டது போது எதிரி அ.சா.1ஐப் பார்த்து தேவடியா முண்டை என அசிங்கமாக பேசி அருவாளை எடுத்து வெட்ட வந்தார். இருவரும் வீட்டிற்கு போய் பயந்து ஒளிந்து கொண்டார்கள். அப்போது அ.சா.1, 2 போலீசில் புகார் கொடுப்பதாக சொன்ன போது எதிரி போலீசில் புகார் கொடுத்தால் வெட்டுவேன் என வீட்டை சுற்றி சுற்றி வந்தார். அதனால் அவர்களால் வெளியே வர முடியவில்லை. எனக்கு மேற்படி தகவலை போன் மூலம் சொன்னார்கள். நான்

உடன் வரமுடியாததால் மறுநாள் வந்தேன். அதன் பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1)**எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாகத் தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது நான் மதுரையில் இருந்தேன். மறுநாள் நான் ஊருக்கு வந்தேன். அப்போது புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு சென்று என் மனைவியுடன் புகார் கொடுத்தேன். புகாரை நானே கைப்பட எழுதினேன் என்றால் என் மகன் செந்தில் எழுதினான். செந்தில் திருப்பூரில் இருக்கிறார். சம்பவத்திற்கு மறுநாள் சாயங்காலமாக செந்தில் வந்தார். செந்தில் எழுதிய புகாரை சார்பு ஆய்வாளர் மகாராஜாவிடம் கொடுத்தோம்.

2) நாங்கள் புகார்கொடுத்த உடனேயே போலீசார் சம்பவ இடம் வந்து புகைப்படம் எடுத்தும், எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். என்னையும், என் மனைவி மற்றும் மகனை் செந்தில் மற்றும் முத்தையாவையும் அன்றைய தினமே விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், எங்களுக்கும் எதிரிக்கும் உள்ள முன் விரோதத்தை வைத்து அ.சா.1 கொடுத்த புகாருக்கு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிறகும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரண:** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து
குற்றவியல் நடுவர்,
தேவகோட்